Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி - 12 29-10-2003 புதன்கிழமை ஓசை 253

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அமைத்திருக்கும்

Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (சி-8628) கிளிநொச்சி.

## கண்காணிப்புக் குழுத்தலைவர் விடயத்தில்

# சந்திரிகா எழுப்பிய சர்ச்சைகள் குறித்து நோர்வேயுடன் ஆராய்ந்து வருகிறோம்

## ஊடகவியலாளர் மத்தியில் தமிழ்ச்செல்வன்

**கண்காணிப்புக்குழு தொடர்பாக சனாதிபதி சந்திரிகா ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகள் தொடர்பாக நாங்கள் நோர்வேயுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறோம். இது குறித்து கருத்துத் தெரிவிப்பது பொருத்தமற்றது என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில் எம்மால் எதிர்வரும் 31ஆம் திகதி கையளிக்கப்பட இருக்கின்ற இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடயங்களையும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இன்றைய சந்திப்பில் பேசப்பட்டது.

● விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட திட்டவரைவு தொடர்பான சில தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இவை உண்மையானவையா?

இவைபற்றிய கருத்துக்களை தற்போது நான் சொல்ல விரும்பவில்லை. அனைவரும் ஊகங்களையே வெளியிட்டுவருகின்றார்கள். உண்மைகளுக்கு நாம் பொறுத்திருப்போம்.

● தமிழ்க்கட்சிகள் மற்றும் மலையகக் கட்சிகள் போன்றவற்றுடன் பேச்சு நடத்தியிருக்கிறீர்கள். முஸ்லிம் தரப்புடன் பேச்சுநடத்தவில்லை என்றதொரு கருத்து நிலவுகிறதே? முஸ்லிம் தரப்புடன் கண்டிப்பாக

(8ஆம் பக்கம் பார்க்க)



## மீனவர்கள் விடுவிப்பு

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 48 இந்திய மீனவர்களில் 17 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்குடாநாட்டு கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 48 பேரிலேயே நேற்று 15 பேரும் நேற்று முன்தினம் இருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மேன்முறையீட்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளும் அரசும் எடுக்கும் எந்த முடிவுக்கும் ஆதரவு

## புலிகளுடனான சந்திப்பின் பின் தொண்டமான்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் எடுக்கின்ற எந்த முடிவுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுநடத்திய பின்னர் பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் 31ஆம் திகதி விடுதலைப்புலிகள்தமது திட்ட வரைவை அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளனர். நாம் சிறுபான்மை இனம் என்றரீதியில் விடுதலைப் புலிகளிடம் கூறியிருக்கிறோம், அரசும் புலிகளும் எடுக்கின்ற எந்தமுடிவாக இருந்தாலும் சரி நாங்கள் அதற்கான ஆதரவை வழங்குவோம் என்று. விடுதலைப்புலிகள் 30வருடங்களாகப் போராடியிருக்கிறார்கள். அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு மாத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சனாதிபதிக்கு அழைப்பாணை; மேல்நீதிமன்றம் விசாரணை!

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதி வாதியாக குறிப்பிடப்பட்டிருக்கும் சனாதிபதியை நீதிமன்றத்தில் ஆஜர் ஆகுமாறு அழைப்பாணை விடுப்பதா என்பது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளது.

பொதுச்சட்ட உதவி நிலையம்

(8ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பொலிஸ்மா அதிபர் திங்களன்று நியமனம்?

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ்மா அதிபருக்கான வெற்றிடம் எதிர்வரும் திங்கட்கிழமை நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வுபெற்ற பின்னர் பொலிஸ்மா அதிபராக இந்திரா டி சில்வாவை சனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு பரிந்துரைத்திருந்தாரெனினும் அதனை அச்சபை ஏற்றுக் கொள்ளவில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

# ரெலவ்சன் தொடர்பான விசாரணை அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இதனை சமர்ப்பிக்கவுள்ளார். அமைச்சர் திலக்மாரப்பன இவர் தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் கிழக்கு மாகாண கடற்படை தளபதிகள், மற்றும் போர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# உள்துறை அமைச்சர் திருமலைக்கு நேற்று விஜயம்!

## முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்திப்பு

(திருகோணமலை)

சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையிலான குழுவினர் நேற்று திருகோணமலைக்குச் சென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கின்லொப்பா உலாமா சபை உறுப்பினர்களுடன் இந்தப் பேச்சுவார்த்தை, ஒரு மணித்தியாலம்

(8ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் வயோதிபர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் நகர மத்தியிலுள்ள இடிமண் பகுதியில்நேற்றிரவு முஸ்லிம் வயோதிபர் ஒருவர் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயங்களுக்குள்ளானார்.

குருந்த வாப்பா (வயது -70) என்பவரே குறிக்கர் சென்று சுயம் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

இவர் திருமலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# க.கா. குழுத்தலைவரை நீக்கக்கோருவது சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கை

## தமிழ்க் கூட்டமைப்பினர் கருத்து

(கொழும்பு)

இலங்கையுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவர் ரிக்லெவ் ரெலவ்சனை அந்தப்பதவியிலிருந்து நீக்குமாறு கோரி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமருக்குஎழுதிய கடிதம் தொடர்பாக தமிழ் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சனாதிபதியின் இந்தகைய நடவடிக்கை சமாதானத்தைக் குழப்பும் ஒரு நடவடிக்கை மட்டுமல்லாமல் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மற்றுமொரு யுத்தத்திற்கே வழிவகுக்கும் ஒரு செயல் என்றும் கூட்டமைப்பு பிரதிநிதிகள் கருத்துத்தெரிவித்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என் ரவிராஜ் கருத்து வெளியிடுகையில், சமாதானக் காற்றை மக்கள் சுவாசித்துக் கொண்டிருக்கும் வேளையிலே ஒரு தலைப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## - கனேடிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

# யாழ். கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கனேடிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் அதன் தலைவர் தவரட்ணம் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த 22ஆம் திகதி பருத்தித்துறை முனைப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதோடு அவர்களது வள்ளங்களும் அழிக்கப்பட்டிருந்த சம்பவம் குறித்தும் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் சென்றுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

10.10.2003 அன்று குமுழமுனைக்கும், தண்ணீரூற்று காவல்ப் பணிமனைக்குமிடையில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறி விட்டது.

கண்டெடுத்தவர்கள் முல்லை மாவட்ட ப.நோ.கூ.சங்கத்திலோ அல்லது ஒளிர்ச்செல்வம் படமாடத்திலோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் தி.சிவபாதம்.தலைவர் ப.நோ.கூ சங்கம் முல்லை மாவட்டம். (சி-7795)

### மொழிபெயர்ப்பு பிரதிகள்வழங்கல்

முல்லை.மாவட்ட பதிவகத்தில் பிறப்பு /இறப்பு,விவாக அத்தாட்சிப் பத்திரங்கள் ஆங்கிலப் மொழி பெயர்ப்பு செய்து கொடுக்கப்படுகின்றது.கட்டணமாக ரூபா 70 முத்திரையை ஒட்டி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என முல்லை மாவட்ட மேலதிகப் பதிவாளர்தெரிவித்தார். (20)

## சாவு அறிவித்தல்

புங்குடுதீவு ஸ்ரீநிவாசக்குருக்கள் சாரதாம்பாள் அம்மா 25.10.2003 சனிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீ நிவாசக்குருக்களின் (புங்குடுதீவு பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு) அன்பு மனைவியும் பரமேஸ்வரி அம்மா (கனடா) இரகுநாதக்குருக்கள் (சிவன்கோவில், வவுனியா) நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி ஐயா) (சிவன்கோயில் புங்குடுதீவு) சண்முகநாதக் குருக்கள் (கனடா)திருஞானசம்பந்த சர்மா (பிள்ளையார் கோவில் மாங்குளம்) கிருஸ்ண் லீலா (கொழும்பு) சர்வானந்தக் குருக்கள் (கனடா) மீனலோசனி (கொழும்பு) குகனேஸ்வரக் குருக்கள் (கனடா) ஆனந்த சர்மா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதி கிரிகைகள் வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்தில் (30.10.2003) வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-

(3129) குடும்பத்தினர்.

## 20 ஆயிரம் பேருக்குச்சிகிச்சை

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இயங்கிவரும் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் 15 மாதங்களில் 20270 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.புரட்டாதி மாதத்தில் மாத்திரம் 1294 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.அநேகமாக வைரஸ்காய்ச்சலினாலும், சுவாசத் தொற்றினாலுமே சிகிச்சை பெற்றுள்ளனர். (20)

## 8ஆம் ஆண்டு நினைவுநாள்

### கரும்புலி லெப். சசிக்குமரன்

தாயின் மடியில்12.12.1976 தாயக மடியில் 29.10.1995

தமிழனின் விதி முடிக்க வந்தபகை கதைமுடிக்க
தனிப்பெருந் தலைவன் புலிக்குகையுள் புகுந்தாய்
பூவாய் நீ புகுந்தாலும் புயலாக எழுந்தே!
சசிக் குமாரனாக உன் உள்ள புடம்போட்டு நகர்ந்தாய்
தாய் மண் மீட்கவேண் தளராது பணி செய்தே
சேய்க்குணம் காட்டாது களத்தில் பெரும்
சாதனை வீரனாக நீ நடந்தாய்.
கனிவுள்ள சசிக்குமாரா காவியம் படைத்தவனே
களத்திலும் தளத்திலும் புயலாய் நின்ற பூவே
உன்னுடலில் ஓடியதோ எம் குருதி ஆனால்
எம் மனதில் நிலைத்ததோ உன் உறுதி
அன்னார் நீ வருவாய் என
ஏனைய [illegible] மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

ஆனந்தபுரம், கிளிநொச்சி. (சி-8678)

குடும்பத்தினர்,
போராளி(தம்பிமார் மாறன், கிரன்




## 8ஆம் ஆண்டு நினைவுநாள்

பிறப்பு 30 - 12 - 1981



வீரச்சாவு 30 - 10 - 1995

### வீரவேங்கை தணிகைச் செல்வன்

(ஜோண்சன் கீத்)

30.10.2003 நாளை கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பெத்லேகம் ஆலயத்தில் பி.பகல் 3.00 மணிக்கு நினைவு அஞ்சலி நிகழ்வு பிரார்த்தனை நடைபெறஇருப்பதால் போராளிகள், உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வணபிதா ஜோண்
குடும்பத்தினர்கள்,
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி.

(3128)

# இல்லை!

# இன்றுமுதல்...!

# விரைவில் உங்கள் மண்ணில்.....!

(சி-8304)

# அரபாத்தை அதிகாரத்திலிருந்து அகற்ற இஸ்ரேல் திடசங்கற்பம் பூண்டுள்ளது!

## - காஸாவில் 2000 மக்கள் வீடிழப்பு -

**பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தை அதிகாரத்திலிருந்து நீக்குவதற்கு இஸ்ரேல் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

ஜெருசலேம் பகுதிக்கு விஜயம் செய்த ஏரியல் ஷரோன் அங்கு ஐரோப்பிய பாராளுமன்ற உறுப் பினர்களைச் சந்தித்துப் பேசி னார். தொடர்ந்து அவர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார்.

அரபாத்தை அகற்றுவதில் திடசங்கற்பம் பூண்டுள்ளபோதி லும் அவரைக் கொல்லும் எண்ணம் இஸ்ரேலுக்குக் கிடையாது.

மேற்குக்கரையில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படுவதற்கு சர்வதேச அழுத்தம் இருந்து வருகிறது. எனினும் இந்தப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அப்போது அவர் கூறினார்.

இது இவ்வாறிருக்க காஸாவில் அல்-சஹாரா பகுதியில் உள்ள பதின்மூன்று மாடிக் கட்டடங்கள் மூன்றை இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை குண்டுவைத்துத் தகர்த்தமையால் இவற்றில் வசித்த இரண்டாயிரம் பலஸ்தீன மக்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த உயரமான கட்டடங்களிலிருந்து அருகிலுள்ள நெட்ஜாரிம் யூதக் குடியேற்றத்தில் இஸ்ரேலிய இராணுவ நடமாட்டத்தைப் பலஸ்தீன குழுக்கள் அவதானித்து வருகின்றன என இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது. இஸ்ரேலின் இந்தக் கட்டடங்கள் தகர்ப்பானது ஒரு யுத்தக் குற்றச் செயலென பலஸ்தீன சிரேஷ்ட அதிகாரியான ஸஹீம் எரகக் தெரிவித்தார். ஜெனிவா உடன்படிக்கையை மீறிய செயலெனவும் அவர் கூறினார்.

மேலும், தண்டிக்கும் நடவடிக்கையாக சொத்துக்களை அழிப்பது சர்வதேச சட்டத்தை மீறும் செயலென ஐ.நா.வின் பிரதிநிதி ரோட் லார் சன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



காஸாப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினரின் நடவடிக்கையின்போது குண்டுத்தாக்குதலுக்குள்ளாகி சிதைந்த கட்டடத்தின் முன் அமர்ந்திருக்கும் பலஸ்தீனச் சிறுவன் ஒருவன்.

### வேண்டுகோள்

பாக்தாதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் காரணமாக சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் தங்களது சேவைகளை இடைநிறுத்திக் கொள்ளக் கூடாதென அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்துள்ளார். ஈராக் மக்களுக்குத் தொடர்ந்தும் சேவையாற்ற சர்வதேச அமைப்புக்கள் முன்வர வேண்டுமென அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வெளிநாடுகளுக்கு பெண்களை வேலைக்கு அனுப்பவேண்டாம் என இந்தோனேசியா-ஜகார்த்தாவில் மனிதவள திணைக்களத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான பெண்கள்.

# சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 3 விண்வெளி வீரர்கள் தரையிறக்கம்

விண்வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து நேற்று மூன்று விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமியை வந்தடைந்தனர். இவர்கள் நேற்றுக் காலை 8.10 மணியளவில் கஸகஸ்தானில் பாலைவனப் பகுதியில் தரையிறங்கியுள்ளனர். இவர்களில் ஒருவர் அமெரிகக்கர், மற்றவர் ரஷ்யபிரஜை இவர்கள் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் 200நாட்கள் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மற்றைய விண்வெளி வீரரான ஸ்பெயின் பிரஜை சமீபத்தில் ரஷ்யாவிலிருந்து புறப்பட்ட விண்வெளி கலத்தின் மூலம் சர்வதேச விண்வெளிநிலையத்திற்குச் சென்றிருந்தார்.

அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்துவிண்வெளி வீரர்களுடன் பூமிக்குத் திரும்பிய வேளை அது இடைநடுவில் வெடித்துச் சிதறியது தெரிந்ததே. இதன் பின்னர் விண்வெளி நிலையத்துக்குத் தேவையான வீரர்களையும், பொருட்களையும் ரஷ்யாவே அனுப்பி வருகின்மை குறிப்பிடத்தக்கது.

## பொதுத்தேர்தல்

ஜப்பானிய பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரம் ஆரம்பமாகியுள்ளது. பிரதமர் யுனிசிரோ கொய்சுமி மக்கள் மத்தியிலுள்ள ஆதரவைத் தனது கட்சியின் வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வாரா என்பதைச் சோதிக்கும் பலப் பரீட்சைக்களமாக இத்தேர்தல் அமையவுள்ளது. தனது நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பப்போவதாக உறுதியளித்த கொய்சுமி ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன. அவரது பொருளாதார மீள் கட்டமைப்புத் திட்டங்களை மக்கள் ஆதரிக்கின்றார்களா என்பதைச் சோதிப்பதாகவும் இத் தேர்தல் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலையும் மேற்குக்கரை நகரையும் பிரிக்கும் வேலியின் நுழைவாசலை பாடசாலைச் சிறார்களுக்காக திறந்துவிடும் இஸ்ரேலிய இராணுவத்தினர்.

# சூரியனில் கரும்புள்ளிகள்; மாற்றங்களுக்கு வழிவகுக்கும்

சூரியனில்அனைவரும்வியக்குமளவிற்கு கரும்புள்ளிகள் தோன்றியுள்ளன. இந்தியாவின் கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி பி.எஸ்.எம்.அலிம் இது குறித்து கருத்துக் கூறியுள்ளார்.


நம்மை ஆளும் சூரியனில் காந்தப் புயலின் காரணமாகக் கரும்புள்ளிகள் தோன்றுகின்றன.

இவை 11 ஆண்டுகளுக்கு ஒருமுறை உச்சமும் நீச்சமும் அடைகின்றன. இந்த ஆண்டு இப்புள்ளிகள் உச்ச நிலையை அடைந்துள்ளன. இந்தக் கால கட்டங்களில் கரும்புள்ளிகளின் எண்ணிக்கை சுமார் 200 முதல் 250 வரை அதிகரிக்கின்றன.

கடந்த ஒருவார காலமாக தோன்றியுள்ள கரும்புள்ளிகள் பூமியின் விட்டத்தைப் போல் (8000 மைல்)சுமார் 20,25 மடங்கு பெரியதாக உள்ளது.

இத்தகைய புள்ளிகள் இந்த நூற்றாண்டில் மிகப்பெரிய புள்ளிகள் என்று அழைக்கப்படுன்றது.

இப்புள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு நாம் வாழும் பூமியில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக உலக மழை வீழ்ச்சியில் ஏற்றம், பயிர் விளைச்சல், பொருளாதார ஏற்றம் போன்றன விளைவுகளாகின்றன என்று அவர் கூறியுள்ளார்.



கொஸ்ரறிக்கா தலைநகருக்கு 350 மைல்களுக்கப்பால் உள்ள சாந்தாகுறுஸ் கடற்கரையில் ஆமைக் குஞ்சொன்றை உணவிற்காகத் தூக்கிச்செல்லும் கழுகு. இங்கு 5 மில்லியன் ஆமைக் குஞ்சுகள் பொரித்தாலும் 10 வீதமான ஆமைகளே தப்பி பெரிதாக வளர்கின்றன.

## 4,500 சிறுவர்கள் தடுப்பு

பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் சுமார் 4 ஆயிரத்து 500 சிறுவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கு பாகிஸ்தான் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனவும் கூறப்பட்டடுள்ளது.

# பிரிக்கப்பட்ட குழந்தைகள் நிலை மேலும் முன்னேற்றம்

அமெரிக்காவில் சத்திர சிகிச்சை மூலம் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட எகிப்து நாட்டு குழந்தைகளின் நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்பட்டுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

அகமட் இப்ராகீம், முகமட் இப்ராகீம் ஆகிய இரு குழந்தைகளும் தற்போது ஒன்றையொன்று பார்த்துச் சிரிக்கின்றன.

இரு வயதேயான இக்குழந்தைகள் முதல் தடவையாக ஒருவரது முகத்தை மற்றைய குழந்தை கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் பார்த்து மகிழ்ந்தமை தெரிந்ததே. இந் நிலையில் சத்திர சிகிச்சையால் பிரிக்கப்பட்ட குழந்தைகளின் மூளையில் ஏதாவது பாதிப்பு நிகழ்ந்திருக்குமா என மருத்துவர்கள் தீவிரமாக ஆராய்ந்துவரும் வேளை, ஒருவரையொருவர் பார்த்துச் சிரிக்கின்றமை நம்பிக்கையளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் அமைதி யோசனைகளுக்கு பாகிஸ்தான் விரைவில் பதிலளிக்கும்

## -பிரதமர் ஸபருல்லாகான் ஜமாலி

(இஸ்லாமாபாத்)

இந்தியா முன்வைத்துள்ள 12 அம்ச அமைதி யோசனைகளைத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் இதற்கான பதில் அளிக்கப்படுமென பாகிஸ்தான் பிரதமர் ஸபருல்லாகான் ஜமாலி கூறியுள்ளார்.

இந்தியாவின் யோசனைகளுக்கு ஆக்கபூர்வமான விரிவான பதிலை இஸ்லாமபாத் தரும்என பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியா முன்வைத்துள்ள யோசனைகளில் பெரும்பாலான யோசனைகளைப் பாகிஸ்தான் ஏற்கனவே தெரிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# பனைவளஆராய்ச்சி நிறுவனத்தைப் புனரமைத்து நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்த வேண்டும்

## யாழ். பல்கலை துணைவேந்தர் சு. மோகனதாஸ்

(அலுவலக செய்தியாளர்)

**பனை வள ஆராய்ச்சி நிறுவனம் உடனடியாக புனரமைப்புச் செய்யப்பட்டு செயல்படுத்துவதன் மூலமே பனை வள உற்பத்திகளை நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி சர்வதேச தரத்திற்கு உயர்த்திக் கொள்ள முடியும்.**

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் வடமாகாண பனை, தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து தொடர்புரை ஆற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் 150 மில்லியன் பனை மரங்கள் இருந்தபோதும் 50 மில்லியன் பனை மரங்கள் தமிழர்களிடம் உள்ளது. இலங்கையில் 10 மில்லியனும், தமிழ் நாட்டில் 40 மில்லியனும் காணப்படுகின்றன.

அன்று தொட்டு இன்று வரை பனம் உற்பத்திப் பொருட்களில் தொழில் நுட்பம் கையாளப்பட்டே வருகின்றது. ஆனால், இன்று நவீன தொழில் நுட்பத்தைப் பனை, தென்னை உற்பத்தியில் உட்புகுத்தப்படல் வேண்டும்.

இதற்கு ஆராய்ச்சியிலும், தொழில் நுட்பத்திலும் வளர்ச்சி காண வேண்டும். எனவேதான் பனை ஆராய்ச்சி நிலையம் உடன் அமைப்பித்து. அதற்கென கொண்டு வரப்பட்ட உபகரணங்கள் ஓரிடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை நியமித்து செய்த ஆராய்ச்சிகளை நடைமுறைக்கிடவும், புதிய ஆராய்ச்சிகளை தொடரவும் வழி செய்தல் வேண்டும். அதற்காக பல்கலைக்கழகம் உறுதுணை புரியும். அத்தோடு, தென்னை ஆராய்ச்சி சபையும் உதவி புரியும். எனவே பனை அபிவிருத்திச் சபை காலத்தின் தேவை அறிந்து உடன் செயற்பட வேண்டும்.

மேலும் பனை, தென்னை வளம் சார்ந்த நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வருடத்தில் 3, 4 தடவைகள் சந்தித்து கொள்கைகளை வகுத்து திட்டங்களை செயற்படுத்த உறுதி வேண்டும். பனை அபிவிருத்திச் சபை, தென்னை அபிவிருத்திச் சபை, பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக்கழகம், தமிழீழ நிர்வாகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியன ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். அதன் மூலம் பனை, தென்னை வள அபிவிருத்தி மேலோங்கும். இந்நிறுவனங்களின் முக்கிய உறுப்பினர்கள் இணைந்து இவ் இரு வளங்களையும் அபிவிருத்தி அடையச் செய்யும் ஆலோசனைச் சபையை உருவாக்க வேண்டும்.

தென்னை ஆராய்ச்சி சபையின் பிராந்திய நிறுவனம் ஒன்று பனையில் அமைப்பதன் மூலம் தென்னை வளப் பயன்பாட்டை மேலோங்கச் செய்ய முடியும் எனவே இன்னும் இவ் வளங்களின் அபிவிருத்திக்குத் தமதியாக துறை சார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று தொழிற் திட்டங்களை இனங்கண்டு சாத்தியக் கூற்று அறிக்கைகளை தயார் செய்து தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தொழிற்சாலை களுக்குரிய மாதிரிகளை உருவாக்கிச் செயற்பட வைத்து காண்பிப்பது போல, பனை அபிவிருத்திச் சபையும் தமது ஆராய்ச்சி நிலையத்தை உடன் செயற்பட வைத்து தொழிற்சாலை மாதிரிகளை அமைத்து செயற்பட வைத்து காட்டுகின்ற நிலையினை உருவாக்க வேண்டும் எனக் கூறினார்.(லோ)

## வாகனம் வழங்கல்

நீரப் (NEERP) திட்டத்தின் கீழ் வட-கிழக்கு மாகாண சபையினால் முல்லை. மாவட்டத்திற்கு ஆறு நிசான் ரக பிக்கப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. (20)

## அக்டோபர் -31 உணவு முத்திரை பெற்றுக் கொள்ளும் இறுதிநாள்!

### கரைச்சிப்பிரதேச செயலர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

உலர்உணவு முத்திரையினைப் பெறத்தகுதியவர்கள்அதனைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதிநாள் அக்டோபர் 31ஆம் திகதி எனவும் அதற் குப்பின் உலர் உணவு முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படமாட்டாதென கிளி/கரைச்சிப்பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலர் உணவு முத்திரை பெறத் தகுதியுடையவர்கள் இதுவரை உலர் உணவு முத்திரையினைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதியன்று கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு சமுகம் கொடுத்து உலர்உணவு முத்திரையினைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளதுடன் எக்காரணம் கொண்டும் அன்றைய தினத்திற்குப் பின் உலர் உணவுமுத்திரை வழங்கும் செயற்பாடுகள் நடைபெறமாட்டாதெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## 'வெற்றிமனை' உளவளத்துணை நிலைய 12வது ஆண்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

வெற்றிமனை மகளிர் உள வளத்துணை நிலையத்தின் 12 ஆவது ஆண்டு விழா நாளை மறு தினம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் பண்ட் றோட் அக்கராயனில் அமைந்துள்ள வெற்றிமனை வளாகத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், பரிசளிப்பு, பணியாளர் கௌரவிப்பு, தமிழழ மகளிர் இசைக் குழுவின் இசைநிகழ்வு மற்றும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கின்னஸில் இடம் பிடிக்க தமிழ் ஊடகவியலாளர் முயற்சி

லண்டனில் தமிழ்ப்பெண் ஊடகவியலாளர் ஒருவர் கின்னஸ் புத்தகத்தில் தனது சாதனைப் பதிவினை மேற்கொள்ளும் பொருட்டு தொடர்ச்சியாக ஐந்து தினங்களுக்கு வானொலி ஒலிபரப்பை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்.

இவர் தனது சாதனையை கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்துள்ளார்.சுவீடன் நாட்டவர் முன்னர் மேற்கொண்ட சாதனையினை முறியடிப்பதற்காக சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் லண்டனில் வசித்து வருபவருமாகிய சிவானந்தி சிவசுப்பிரமணியம் எனும் பெண் ஊடகவியலாளர் இந்த உலக சாதனையினை மேற்கொண்டுள்ளார்.

இதன் மூலம் தனக்குக் கிடைக்கும் நிதியினை லண்டனில் உள்ள செயற்கைக் கால் பொருத்தும் 'வெண்புறா' அமைப்புக்கு வழங்கவுள்ளதாக இவர் கூறியுள்ளார்.

இவரது உலக சாதனை நாளை முடிவடையும். 8மணித்தியா லங்களுக்கு ஒரு தடவை 15 நிமிட இடைவேளை வழங்கப்படுகின்றது. ஒவ் வொரு நிமிடமும் இவரது குரல் ஒலிக்க வேண்டும் என்பதே நிபந் தனை யாகும்.லண்டனிலுள்ள ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும், ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் இவரது உலக சாதனைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள்.

## சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் வகையில் பொதுச்சந்தையில் மீன், இறைச்சி விற்பனை!

(அலுவலக செய்தியாளர்)

கிளி. ஜெயந்திநகரில் அமைந்துள்ள பொதுச்சந்தையில் இறைச்சி, மீன் விற்பனைகள் யாவும் நிலத்தில் வைத்தே விற்பனை செய்யப்பெற்று கொண்டு வருகின்றனர்.

இது குறித்து மேற்படி சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவரிடம் எமது செய்தியாளர் வினவியபொழுது தெரிவிக்கையில், வியாபாரத்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஏனைய நடைமுறைகள் யாவும் வழமைபோல் நடைமுறைப்படுத்தப்பெற்று வருகின்றன. ஆனால், எமது மீன்



கொட்டகையில் மரக்கறி வாணிபம்.



மர நிழலில் மீன் வாணிபம்.

வருவதனைக் காணக்கூடியதாக வுள்ளது.

மேற்படி பொதுச்சந்தையில் மரக்கறி பொருட்கள் விற்பனைக்கென கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள நிலையிலும், மீன் இறைச்சி விற்பனைக்கு கொட்டகை அமைத்துக் கொடுக்கப்படாத நிலையில் மீன், இறைச்சி விற்பனை செய்யும் வியாபாரிகள் நிலத்தில் வைத்தே மீன், இறைச்சி வியாபாரத்தினை மேற்

வெயில் காலமாகவிருப்பினும் சரி, மழைக் காலமாகவிருப்பினும் சரி, மீன் இறைச்சி விற்பனையினை ஜெயந்திநகர் பொதுச்சந்தை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை கொட்டகை அமைத்துக் கொடுக்கப்படாத நிலையில் நிலத்தில் வைத்தே விற்பனை செய்து வருகின்றோம். மழை நேரத்தில் நனைந்து கொண்டும் வெயில் நேரத்தில் மர நிழலில் நின்று கொண்டுமே இறைச்சி விற்பனைக்கென கொட்டகை அமைத்துத் தருவதற்கு இது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பெற்று வருவதாகத் தெரியவில்லையென மிக மன வருத்தத்துடன் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மீன், இறைச்சி போன்றன மண் மற்றும் வெயில் தாக்கங்களினால் பழுதடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படக் காரணியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வங்கி வட்டி வீதங்கள் குறைப்பு; ஆராய அமைச்சரவை உபகுழு

(கொழும்பு)

வங்கிகள் தமது வட்டி வீதத்தை குறைப்பது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி ஆராய பொருளாதாரக் கொள்கை தொடர்பான அமைச்சரவை உபகுழு ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் உருவாக்கப்பட்டது.

மேற்படி உபகுழு ஒன்று கூடி இது தொடர்பாக வங்கிகள் காட்டி வரும் அசமந்தப் போக்கை இட்டும் வங்கிகள் வைப்புக்கான வட்டி வீதத்தை மாறாக குறைப்பது பற்றியும் அரசாங்கம் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வங்கிகள் தமக்கு உரிதான அனுகூலங்களை அனுபவிப்பதில் தவறில்லை.

ஆனால், கடன் படுவோருக்கு இவை சென்றடையவிடாது தடுப்பது தவறு என்பதாலுமே மேற்படி ஆராய்வு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரூ. 2,500 கோடி செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தென் மாகாணத்தில் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

தென் மாகாணத்தில் அடுத்த வருடம் அபிவிருத்தியின் நோக்காக, எண்ணெய் சுத்திகரிப்பு நிர்மாணப் பணிகளுக்காக 2500 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது என அமைச்சர் கரு ஜெயசூரிய கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் துறைமுக நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென் பகுதியில் புதிய தொரு விமான நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

இவற்றைத் தவிர, நிலக்கரி மின் உற்பத்தி நிலையமும், 50ஆம் அறைகளைக் கொண்ட சுற்றுலாப் பயணத்துறை ஹோட்டலும் அமைக்கப்படவுள்ளது.

மகா பொற்தனவில் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனரமைக்கப்பட்ட 28 வீடுகளை கையளிக்கும்போது அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

## 1990ஆம் ஆண்டிற்குப்பின்னான காலப்பகுதியில் பதினோராயிரம் பேர் காணாமல் போயினர்

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

(கொழும்பு)

வடகிழக்கில் 1990ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற 12 ஆண்டுகால யுத்தத்தினால் 11ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள செய்தி மடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டுகளில் காணாமல் போனோர் தொடர்பான 20 ஆயிரம் முறைப்பாடுகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கிடைத்துள்ளன. காணாமல் போனவர்களில் 9 ஆயிரம்பேர் தொடர்பான விபரங்களை தேடிக் கண்டுபிடித்து அவர்கள் உயிருடன் உள்ளார்களா? அல்லது யுத்தத்தினால் கொல்லப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பான விபரங்களை இச்சங்கம் அவர்களது உறவினர்களுக்கு அறிவித்துள்ளது. ஏனைய 11 ஆயிரம் பேர் தொடர்பான விபரங்களை இன்னும் அறியமுடியாதுள்ளதாக சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இயந்திரம் வெடித்து இருவர் பலி

அம்பாறை நிந்தவூர் பிரதேச நெல் ஆலை ஒன்றில் நெல் குத்தும் இயந்திரம் நேற்றுமுன்தினம் வெடித்துச் சிதறியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பேர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

ஐந்து வயதுச் சிறுமியும், அவரது தந்தையும் உயிரிழந்தவர்களாவர்.

# இந்தியா-சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு

# சமாதானத்திற்கோர் அச்சுறுத்தல்

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்று பல தடவைகள் இந்தியாவிற்கு விஜயம் செய்திருப்பினும் கடந்த 21ஆம் திகதி அவர் இந்தியாவிற்கு மேற்கொண்டிருந்த விஜயம் தென்பகுதி அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்களை தோற்றுவித்துள்ளது.

பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் சிறிலங்காவிற்கு நன்மை பயக்கும் வகையில் தீர்மானமான முடிவுகளை இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.



ரணில்

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தான் விரும்பிய மாத்திரத்தில் அமைந்திருக்க வேண்டும் என்று எண்ணி வந்த இந்தியாவிற்கு சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பு சூழல் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாத இந்தியா சிறிலங்காப் பிரதமருடன் "இலங்கை இந்திய ஒத்துழைப்பு உடன்பாடு" ஒன்றைச் செய்து வது குறித்து சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்குள் பொருளாதார, பாதுகாப்பு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

இலங்கையின் இறைமை ஐக்கியம் என்பவற்றிற்கு ஆபத்து ஏற்படும்போது அதிலிருந்து இலங்கையை இந்தியா காப்பாற்ற வேண்டும் என்பதும் இந்தியா-இலங்கைக்கிடையில் வரிகளற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழியை ஏற்படுத்துதல் என்பதும் மறுபக்கத்தில். இந்தியாவின் பாதுகாப்பு, இறைமை மற்றும் சிறிலங்காவிலுள்ள இந்திய முதலீடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறிலங்கா நடந்து கொள்ள வேண்டும் என்பதும், இந்திய சிறிலங்காவிற்கிடையில் வரிகளற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழியை ஏற்படுத்துதல் என்பதும் இந்த இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கான விடயங்களாகும்.

இலங்கை அரசின் இறைமைக்கும் ஐக்கியத்திற்கும் ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் தற்போது வலுவடைந்துள்ளதாக இலங்கை அரசு எண்ணுகிறது. புலிகளின் இராணுவ வளர்ச்சி இலங்கை அரசிற்கு இந்த அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் இலங்கை அரசிற்கே தனது ஐக்கியத்தைப் பேண வேண்டிய அவசியம் முதல் படியாக ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அது இந்தியாவின் உதவியை நாடியுள்ளது. இந்தியாவின் உதவியுடன் இலங்கை தனது இறைமை, ஐக்கியத்தை பேணிக் கொள்ள முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளதின் வெளிப்பாடாகவே இந்தியாவுடன் இந்த உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ள எடுக்கப்படும் முயற்சியை கொள்ள முடியும்.

இலங்கை நீட்டிய கையை பற்றிப் பிடிக்கும் நிலையிலேயே இந்தியாவும் இருக்கிறது. ஏனென்றால், இலங்கையின் ஐக்கியத்திற்கு ஆபத்து ஏற்பட்டு பிரிவினை ஏற்பட்டால் அதன் விளைவானது இரண்டாம் படியாக இந்தியாவின் ஐக்கியத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடக் கூடும் என்று இந்தியா கருதுகிறது. இந்த எடுகோளிற்கிணங்கவே இலங்கையின் ஐக்கியத்தைப் பேணும் முயற்சிகளை எடுக்கக் கூடிய அம்சங்களைக் கொண்ட ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்காக சாதகமான சமிக்கையை இந்தியா காட்டியுள்ளது. இதற்கான இரு தரப்புப் பேச்சு வார்த்தைகளை நடத்தவும் இந்தியா தயாராய் உள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இவ்வாறானதொரு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டாலும் இலங்கையின் ஐக்கியத்திற்கு இந்தியாவிடமிருந்து உதவி கிடைக்கப்பெற்றாலும் இலங்கை தனது இறைமையை எவ்வாறு தக்கவைத்துக் கொள்ளும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தமது நாட்டின் ஐக்கியத்திற்காக அன்னிய இராணுவ அழுத்தங்களை நம்பியுள்ள இலங்கையால் தனது இறைமையைப் பாதுகாப்பது கடினமாகவே இருக்கும். ஏனெனில், இலங்கை அரசின் பொருளாதாரம், அரசியல் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் இந்த அன்னிய இராணுவ அழுத்தமே செல்வாக்குச் செலுத்தும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**கெல்மன்**


அது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சிறிலங்கா நடந்து கொள்ள வேண்டும் என்ற அம்சமானது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்துடன் சம்பந்தப்படுகின்றது. அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் தாக்கங்களையும், திருப்பங்களையும் ஏற்படுத்தவல்லதாகும்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இச்சமாதான முயற்சியின் இன்றைய கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு வலுப்பெற்று சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டு அரசிற்கான அழுத்தத்தையும் கொடுத்திருக்கின்றது.

இதேவேளை, இடைக்கால நிர்வாகம் புலிகள் கையில் போவதை விரும்பாத இந்தியா பல்வேறு இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் குறிப்பாக, மேற்குலகின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் முகமாக சிறிலங்காவுடன் ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றை செய்துகொள்ள முற்பட்டுள்ளது. தமிழர்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்ள முற்பட்ட மேற்குலகின் செயற்பாடுகளுக்கு சிறிலங்கா இனவாதிகள் வைத்துள்ள ஆப்பு என்றே இந்த உடன்பாட்டைக்கூற முடியும்.

ஏனெனில், 1987, 1988, 1989 காலப் பகுதியில் இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்தது. அப்போது இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் என்றும் இலங்கையைவிட்டு வெளியேற வேண்டும் என்றும் இந்தியாவிற்கு எதிரான பலமான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. ஜே.வி.பி. இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் அவற்றை மக்கள் கொள்வனவு செய்யக் கூடாது என்றும் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்தது. மைசூர் பருப்புக்கு இந்திய நகரத்தின் பெயர் சேர்ந்துள்ளதால் அதை சிவப்புப் பருப்பு என அழைக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி. கோரியது. ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கையின் விளைவாக துருக்கியிலிருந்து பருப்பை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையும் சிறிலங்கா ஆட்சியாளருக்கு அப்போதைய கால கட்டத்தில் ஏற்பட்டிருந்தது. ஆனால், தற்போது அந்த ஜே.வி.பி. கட்சியானது குத்துக் கரணம் அடித்த நிலையில் இந்திய ஆதரவுப் போக்கைக் கைக்கொள்கிறது. அதாவது, இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது எனக் கூறுகிறது. சமாதானப் பேச்சு வார்த்தையில் அனுசரணையாளராக நோர்வேயை அகற்றிவிட்டு இந்தியாவை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அக்கட்சி கோரி வருகிறது. அதேவேளை, பொதுசன ஐக்கிய முன்னணியும் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் இந்திய சார்பு நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் உயர்ந்த சனநாயகப் பண்புகளுடன் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள ஆட்சியாளரும் விரும்பவில்லை. அத்தோடு இவ்வாறான அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிர்க்கட்சிகளிடத்தில் பலமான எதிர்ப்புகளும் உண்டு. வடக்கு-கிழக்கிற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவை ஆளும் கட்சி இழக்க நேரிடும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் வடக்கு-கிழக்கிற்கு அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ள முடியாது.. அதிகாரப் பரவலாக்கல் ஒன்றை நிரந்தரமாகச் செயற்படுத்த வேண்டுமாயின் அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவரப்படுவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும். இந்தளவிற்கு ஆதரவைத் திரட்டக்கூடிய நிலையில் ஆளும்கட்சி இல்லை. ஆளும் கட்சியும் விளிம்பிலேயே நிற்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இந்த அரசியல் கையறு நிலையில்த்தான் மேற்குலகின் நிர்ப்பந்தங்களைக் கட்டுப்படுத்தவும் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும் புலிகளின் இராணுவ வளர்ச்சிப் போக்கினால் நாட்டின் ஐக்கியத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை எதிர்கொள்ளவும் இந்தியாவுடன் உடன்பாடு ஒன்றையும் செய்துகொள்ள முற்பட்டுள்ளது. இதை உணர்ந்து கொண்ட இந்தியா தனது வெளியுறவுத்துறைஅமைச்சர் ஜஸ்வந்த் சிங்காவை கொழும்பிற்கு அனுப்பி உடன்பாடு குறித்த இறுதித் தீர்மானத்தை தெரிவித்திருந்தது. இதனையடுத்து உடன் இந்தியாவிற்கு விரைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா-இலங்கை ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கு சாத்தியமானவற்றை செய்வதற்கு முற்பட்டுள்ளார். இவ் உடன்பாடு கைச்சாத்தாகினால் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் மேற்குலகின் விருப்பு வெறுப்புக்கள், செயற்பாடுகள் இவ் ஒப்பந்தத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படப் போகிறது. அத்துடன் மேற்குலக சனநாயகப் பண்புகளுடன் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறவும் இவ் உடன்பாடு முட்டுக்கட்டையாகவே அமையும். இந்தியாவின் இறைமை, பாதுகாப்பு என்பவற்றின் பேரில் இந்த முட்டுக்கட்டைகள் எழும்.



வாஜ்பாய்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இந்தியா தலையிட வேண்டும் என பத்திரிகையாளர் அண்மையில் இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாயிடம் கேட்ட போது "பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வேலையை இந்தியா செய்யும்" என அவர் கூறியிருந்தது இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதே.

இலங்கை இனப்பிரச்சினையைத் தனது நலனிற்கேற்ப இந்தியா கையாள முற்பட்டுள்ளது ஒருபுறமிருக்க தமிழர்களின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டு இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விரும்பாத சிங்கள தேசம் தீர்வில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான உடன்பாடுகளை செய்ய முற்பட்டு நிற்பதானது இனவாதத்தின் மறுவடிவமே.

சிங்கள தேசத்தின் இந்த நயவஞ்சக போக்கை சர்வதேச சமூகம்குறிப்பாக மேற்குலகம் புரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு இது தேவையானதும்கூட.

# சனாதிபதியின் பாராளு. கலைக்கும் அதிகாரத்தைப் பறிக்க வேண்டும்

## பூமி புத்ர ஆலோசனை

(கொழும்பு)

தற்போதைய ஆட்சிக் காலத்திற்குள் சனாதிபதியிடம் இருக்கும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும் அதிகாரத்தை நீக்கி அதனை மக்களின் கருத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தென்னிலங்கையிலுள்ள பூமி புத்ர கட்சி தேர்தல்கள் புனரமைப்பு தொடர்பான பாராளுமன்ற செயற்குழுவுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

பாராளுமன்றத்தின் ஆட்சிக்காலம் முடிவடைந்து ஒரு மணித்தியாலம் தானும்ஒருவர்பதவியிலிருந்தால் அது பொதுமக்களின் ஆணைக்கு தடையாகும் எனக் கூறும் அக்கட்சி அது மரண தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த 10 வருட காலத்தில் சகல வேட்பாளர்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்ய முன்பு சட்டத்தின் முன் குற்றவாளியாகவோ, தண்டனை பெற்றவராவோ, சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களாகவோ இல்லாமல் இருக்க வேண்டும் எனவும் அதனை உறுதிப்படுத்த ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும், இதன் மூலம் அபேட்சகர் ஒருவர் மீது பொது மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் கட்சி கூறியுள்ளது.

# பொ.ஐ.மு. ஊர்வலத்தில் பங்கேற்றமையால் ஜே. வி.பி. உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி

(கொழும்பு)

அரசுக்கு எதிராக பொ.ஐ. முன்னணியின் 'மக்கள் படை' என்ற அமைப்பினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் ஜே.வி.பியை பிரதிநித்துவம் செய்யும் வகையில் நிகழ்வில் கலந்துகொண்ட விமல்வீரவன்ச அநுரகுமாரதிசாநாயக்க, விமல் ரத்நாயக்க ஆகியோருடன் அதே கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் முரண்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது "ஜனசேனா" இயக்கத்தைக் கடுமையாக விமர்சித்த கட்சியினர் சிலர் பின்னர் நடைபெற்ற ஜனசேனா இயக்கப் பேரணியில் கலந்துகொண்டமையானது அவர்கள் தமது அரசியல் சுயரூபத்தைக் காட்டியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவ்வாறான பேரணிகளில் கலந்து கொள்ளவோ வருகைதரவோ கூடாத வகையில் தமது கொள்கைகளை இனி வரும்காலங்களில் மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

மேற்படி "ஜனசேனா" மக்கள் படை அமைப்பில் ஜே.வி.பி.யினர் கலந்துகொள்வது தொடர்பாகக் கருத்துக் கூறிய கட்சிப் பேச்சாளர் எதிர்காலத்தில் கூட்டணிபற்றிய பேச்சுக்களில் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் ஒருசிலரே அவ்வியக்கத்தில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவித்தள்ளார்.

முன்னர் இவ்வமைப்பில் பங்கு பற்ற மறுத்த நிலையிலும், தமது பிரதிநிதிகள் இவ் எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்ளச் செய்ய முடியாது போனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தோரும் தமது நடவடிக்கைகளில் பங்குகொள்ள மாட்டார்களென அஞ்சியே ஜனசேன அமைப்பில் கலந்த கொள்ளச் செய்ததாக விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்த அளவில் கூட்டணி சாத்தியமாகாதுபடியால் ஜே.வி.பி. பிரச்சார செயலர் பலரின் வெறுப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் பேரணியில் கலந்து கொண்டதால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நட்புப் பேணப்படும் எனவும் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# அனைத்துத் துறையிலும் தமிழ் மக்கள் பலம் மிக்கவர்களாக விளங்க வேண்டும்

## மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

**"கடுமையான உழைப்பு மூலம் ஆண்பெண் என்ற வித்தியாசமின்றி எமது பொருளாதார வளங்களையும் மற்றும் சகல துறைசார்ந்த வளங்களையும் மேம்படுத்தி எமது தேசியத் தலைவரின் காலத்தில் சகல உரிமையுடன் கூடிய விடியலை பெறுவதற்காக திடசங்கற்பம் பூணுவோம்." இவ்வாறு மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் வேண்டுகோள் விடுத்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் அபிவிருத்தி கருத்தரங்கு மற்றும் கரைவலை உரிமையாளர்களின் அங்குரார்ப்பண வைபவமும் கடந்த சனிகாலை 11.00 மணிக்கு மட்டு அரசடி மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் கடல்வளப் பிரதிப் பொறுப்பாளர் ச.யோகன் தலைமையில் இடம்பெற்ற போது சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தொடர்ந்து கூறுகையில், இன்று எமது தாயகத்தில் இராணுவம் பலம் பொருந்திய பெரும் தமிழ்ப் படையாக நாம் வளர்ந்துள்ள அதேவேளையில் ஏனைய துறைகளிலும் பலம் மிக்கவர்களாக வளர்ச்சியடைய வேண்டும். இதற்காக சோம்பேறித்தனத்தை விட்டு சுறுசுறுப்புடன் ஏனையவர்களைப் பற்றிக்கூறி காலம் கடத்தாமல் சுயமாக நாம் முன்னேறக்கூடிய வகையில் சகலரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

மீன்பிடித்துறையானது எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்த இடத்தைப் பெறுகின்றது. மீனவர் சமூகம் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டும் எனவும் கூறினார். மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய பொறுப்பாளர் கி.நிசாம் தனதுரையில் கடந்த இருபது வருடகாலமாக எமது மண்ணில் இடம்பெற்ற இனப்போர் காரணமாக எமது தாயகத்தில் உள்ள மீனவர்கள் பல தடைகளையும், உயிர் வதைகளையும் சுமந்த படி கடல்வலயச் சட்டம் என்ற போர்வையில் சிங்கள அரசினால் ' பெரிதும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டனர். அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை எனவும் கூறினார்.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி, நகர அரசியல் பொறுப்பாளர் இ.சேனாதிராஜா கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.தம்பையா, நிர்வாக அதிகாரி தனபாலசிங்கம், கடற்றொழில் உதவிப்பணிப்பாளர்களான ஜோர்ச், செல்வராசா, கடற்றொழில் பயிற்சிப் பொறுப்பாளர் உட்படப் பலரும் உரையாற்றினர்.

# பொதுமண்டபத்திற்கான அடிக்கல் நாச்சிக்குடாவில் நாட்டிவைப்பு

தமிழ் மக்கள்- முஸ்லிம் மக்களுக்கான பொது மண்டபம் அமைத்தலுக்கான அடிக்கல் நாட்டு விழா பூநகரி நாச்சிக்குடாவில் கடந்த ஞாயிறன்று பகல் இடம்பெற்றது. இவ் ஆரம்ப விழா நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் பொ.தங்கராசா, பூநகரிமுழங்காவில் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் மு. நவரத்தினம், சமாதான நீதிபதி சூசைநாதன், பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் நீக்கிலாப்பிள்ளை காசிம் ஆகியோர் ஏற்றி வைக்க மேற்படி பொதுமண்டபத்திற்கான அடிக்கல்லினை பூநகரி பிரதேச செயலாளர் வயிரமுத்து, நாச்சிக்குடாப்பங்குத்தந்தை ,தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கிளிநொச்சி மாவட்டப்பணிப்பாளர் ஜெகா காசிம் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

பொதுக்கிணறுக்கான அடிக் கல்லை கிராமசேவையாளர் நாகலிங்கம், பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி ஆகியோர் நாட்டிவைத்தனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர். மேற்படி வேலைகளுக்கான நிதியுதவியை யு.என்.எச்.சி.ஆர் சேவாலங்கா, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்திற்கு செய்யவுள்ளது.

# டைகர் எனும் புதிய இன மண்புழு உரம் உற்பத்தி

(ஒட்டுசுட்டான்)

இரு இனப் புழுக்களை கலப்பினம் செய்து டைகர் எனும் புதிய இனமண்புழு உர உற்பத்தி செய்யப்படுகின்றது. வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் அமெரிக்கா வில் இருந்து கொண்டு வரப்பட்ட "இசினியா", "பெட்டாலும் பிறிக்கஸ்" என்ற இரு இனங்களையும் இனக் கலப்புச் செய்து உருவாக்கப்பட்ட "டைகர்" எனும் புதிய இனத்தை இயற்கைப் பசளையாக பிரயோகிக்கப்பட உள்ளது. இவ் உரபுழுவானது மண்ணில் துளையினை இடுவதால் தாவரவேர்கள் மண்ணில் வேகமாக ஊடுபுக வளி அமைப்பதுடன் மண்வளியும் அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு என்பதால் விவசாயிகளுக்குப் பெரும நன்மை அளிக்கும் நோக்குடன் உற்பத்தி செய்யப்படு கின்றதாகப் பொருண்மிய மதியுரை யாக செய்தி தெரிவிக்கின்றது. (05)

## கவனத்திற்கொள்க!

தற்பொழுது மாமரங்கள் பூக்கும் காலம் ஆரம்பித்துள்ளதால் உங்கள் மாமரங்களில் புதிய தளிர் பூப்பதற்கு முன்னர் மாமர இலைத்தத்தியை கட்டுப்படுத்தல் மிக அவசியமானது. எனவே இதை கட்டுப்படுத்த "டைமீடோ ஏற்-40" எனும் கிருமிநாசினியை விவசாய போதனாசிரியர்களை தொடர்பு கொண்டு சிபாரிசின் படி விசிறலாம்.

இதற்கான தெளிகருவிகள் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் செயலகங்களிலும், கமநலசேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள் ளலாம். உடனடியாக உங்கள் பகுதி விவசாயபோதனா சிரியருடன் தொடர்பு கொண்டு இவ் தத்தியை கட்டுப்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாய திணைக்களத்தினரும் கேட்டுக்கொள்கின்றனர். (05)

# இரு இராணுவக் காவலரண்களில் மட்டும் பொலிஸ் மேற்பார்வையில் 'பாஸ்'

பருத்தித்துறை முனைப்பகுதியினுள்ள குறித்த இரு இராணுவ காவலரண் பகுதிகளில் பொலிசார் நேரடிக்கண்காணிப் பின் கீழ் 'பாஸ்' களை இராணுவத்தினர் சோதனை செய்யும் நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் புனித தொம்மையப்பர் தேவாலயம் முன்பாக உள்ள 5ஆம் மற்றும் 6ஆம் இலக்க இராணுவ சோதனைச்சாவடிகளில் மட்டும் இந் நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி முனைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து மீனவர்களுக்கும் படையினருக் குமிடையே மூண்ட முறுகல் நிலையை அடுத்தே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை. பருத்தித் துறை முனைப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து, முனை இறங்குதுறையில் தரித்து நின்ற வேளை காணாமல் போன மீன்பிடிப்படகு ஒன்று சேதமாக்கப்பட்ட நிலையில் கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளது. மீன்பிடித்தொழிலுக்குச் சென்ற ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்ட இப்படகு கரை சேர்க்கப்பட்டிருந்த போதும் அதன் வெளியிணைப்பு இயந்திரம் காணாமல் போய்யுள்ளது. இப்புதிய வெளியிணைப்பு இயந்திரத்தின் பெறுமதி சுமார் இரண்டு இலட்ச ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்தபடகு பலாலிப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து, முனைப் பகுதியில் வசித்து வந்த மீனவர் ஒவருக்குச் சொந்தமானதென தெரியவருகின்றது.

ஆயினும் இப்பகுதியில் மீனவர்கள் மேற் கொண்டுவந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து சுமுக நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. (27)

## புதிய திட்டம்

பெண்கள் துன்புறுத்தப்படும் குற்றச் செயல்களை விசாரணை செய்வதற்காகப் புதிய திட்டமொன்றை மகளிர் விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு ஆரம்பித்துள்ளது. துன்புறுத்தல் அல்லது குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் இந்தக் குழுவிற்கு 'நேரடியாக தங்களது முறைப் பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும். இந்த முறைப்பாடுகளை சட்டத் தரணிகள் குழு பரிசீலனை செய்யும் இதனைத்தொடர்ந்து பொருத்தமான நிவாரணம் வழங்க அமைப்பின் குழு நடவடிக் கைகள் மேற்கொள்ளும்.

# திட்டவரைவு குறித்து அரசு எத்தீர்மானத்தை எடுப்பினும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பலத்துடன் தமிழர் உள்ளனர்

## - பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகத்திட்ட வரைவை சிறிலங்கா அரசு ஏற்றாலும் ஏற்காதுவிட்டாலும் தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கக் கூடிய அதிகாரத்துடன், பலத்துடன் இருக்கின்றனர். இதை தென்னிலங்கை இனவாத சக்திகள் உணர்ந்து கொள்ளவேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் திட்டவரைவை தென்பகுதி இனவாத சக்திகள் நிராகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன.

உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினரை மீளப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக மக்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகமும் இராணுவ நெருக்குவாரங்களுமே அதிகரித்து வருகின்றன. இவை குறித்து கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பல தடவைகளில் சுட்டிக்காட்டியும் பலன் கிடைக்கவில்லை. எனவே இந்த அரசாங்கம் வரைவை ஏற்றுக்கொண்டாலும் சரி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி தமிழர்கள் ஒரேதலைமையின் கீழ் தனித்து நின்று தம் ஆட்சி உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய பலத்துடன் என்றுமே தயாராகத்தான் இருக்கின்றார்கள் என்று தென்னிலங்கை இனவாதசக்திகள் உணராமல் இருக்கின்றன. என்று அவர் மேலும் கூறியுள்ளார். (33)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 | | 09 |
| 08 | | 11 |
| 1935 | | 2002 |



**அமரர் சின்னத்தம்பி அம்பலவாணர்**
**(இளைப்பாறிய நில அளவை ஊழியர்)**
திதி: 29-10-2003

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கே
எமது வாழ்வை வளமாக்க அல்லும் பகலும்
பாடுபட்ட அன்புத்தெய்வமே. ஓராண்டு
சென்றாலும் எங்கள் இதயங்களில்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: ஜெயமலர் சிவசங்கர்,
(மகள், மருமகன்)
இரத்தினபுரம், கிளிநொச்சி.

(3127)

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

நே.ஹானுசா

நேசநாதன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி நே. ஹானுசா தனது பிறந்த நாளை இன்று 29-10-2003 குருமன்காடு வவுனியாவில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

நேசநாதன் குடும்பத்தினர்.

29
10
2003




(3120)



**சிந்தனைக்கு**

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும்; அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-10-2003

## வளச் சுரண்டல்!

அரசு வனவளப் பிரதேசங்களையும், நதிகளையும் அமெரிக்காவிற்கு 30வருட காலக் குத்தகைக்குவிடப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அரசின் இந்நடவடிக்கைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் கண்டனமும் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து அவர்கள் யாராக இருப்பினும் நாட்டின் சொத்தாக, வளமாக இருப்பவற்றை விற்றுவிட்டோ அன்றிக் குத்தகைக்குவிடவோ பின்னின்றதில்லை. இதற்கு நாட்டில் செயற்பட்டு வரும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் ஆட்சியாளருக்கு ஆலோசனை வழங்கும் வெளிநாட்டவர்களின் செயற்பாடுகளும் காரணமாகும். ஒருவகையில் பார்த்தால் ஆட்சிக்கு வரும் முன்னே எதனை விற்பனை செய்யலாம் என அரசியல் கட்சித்தலைவர்கள் சிந்திப்பதாகவே தெரிகிறது. ஆனால் ஒவ்வொரு அரசியல்வாதியும் தான் எதிர்க்கட்சியாகியதும் இவை குறித்து கண்டனங்களையும் எச்சரிக்கைகளையும் விடுபவர்களாகவே உள்ளனர். இவர்களின் கண்டனங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து தனியார் மயப்படுத்தல் வரை உள்ளன. ஆனால் ஆட்சிக்கு வந்ததும் தனியார் மயப்படுத்தலிலும் குத்தகைக்கு விடுவதிலும் தீவிரமாகவே உள்ளனர்.

ஆனால் படிப்படியாக அரச உடமைகளைத் தனியார் மயமாக்கியும் விற்பனை செய்தும் வந்த அரசியல்வாதிகள் தற்பொழுது இயற்கை வளங்களை விற்பனை செய்யவும், அவை பெருமளவில் தீர்ந்த நிலையில் குத்தகைக்கு விடவும் முனைந்துள்ளனர். இந்தவகையிலேயே அரச வனப்பகுதிகளையும் நீர் நிலைகளையும் குத்தகைக்கு விடுவதெனத் தீர்மானம் எடுத்துள்ளனர். அரசியல்வாதிகளைப் பொறுத்து விலை போகக் கூடியவற்றை விற்போம் என்ற நிலையே உள்ளனர். இதன்பிரகாரமே நிலம், நீர் என்பவற்றை விற்பனை செய்ய முன்வந்துள்ளனர்.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இதுபெரிய மனச் சங்கடத்தை ஏற்படுத்தும் விடயம் அல்ல. ஏனெனில், சிங்கள அரசியல்வாதிகள், மக்கள் இவற்றின் பாதிப்புக்கள் குறித்து அலட்டிக் கொள்வதில்லை. அவ்வாறு அவர்கள் புரிந்து கொள்வார்களேயானால் ஆட்சியாளர்கள் தமது இஸ்டத்திற்கு ஏற்ப இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டார்கள்.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் 77களில் திறந்த பொருளாதாரக் கொள்கை முன்வைக்கப்பட்ட போது, அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், விளைவுகள் பற்றி பலமான எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் எவரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. அதன் விளைவுகள் தற்பொழுது அனுபவிக்கப்படும் ஒன்றாகிவிட்டது.

இன்று ஆசியப் பிரதேசத்தில் குறிப்பாக தெற்கு, தென்கிழக்குப் பிராந்தியத்தில் தாய்லாந்திற்கு அடுத்த பாலியல் துர்நடத்தை, சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றில் சிறிலங்காவே முன்னணி வகிக்கின்றது. இது தவிர இத்திறந்த பொருளாதாரக் கொள்கையானது போதைப் பொருள் விநியோகம் மற்றும் பாதாள உலக கோஷ்டிகளின் செயற்பாடு என்பனவற்றால் தென்னிலங்கைப் பகுதி பெரும் சீர்கேட்டிற்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளது.

இன்று சிறிலங்காவில் போதைப்பொருள் பாவனையும் பாதாள உலகக்கோஷ்டியினரின் செயல்களும் கட்டுப்படுத்த முடியாதவையாகியுள்ளன. அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினரே இச்சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் ஆலோசகர்களாகவும், பாதுகாவலர்களாகவுமுள்ளனர். அத்தோடு நாட்டில் பல்கிப் பெருகிவிட்ட ஆயுதத் தளபாடங்கள் இவர்களுக்கு உதவுபவையாகவுள்ளன.

இவை யாவற்றிற்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையே வழி சமைத்துக் கொடுத்ததெனலாம். அவ்வாறு இருந்தும் அரசாங்கம் திருந்தியதாக இல்லை. மாறாக தற்பொழுது வனப் பகுதிகளையும் ஆறுகளையும் குத்தகைக்குவிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதாவது, நாட்டின் சொத்துக்கள் யாவும் விற்பனை செய்து முடிந்துவிட்ட நிலையில், தற்பொழுது இயற்கை வளங்களை அது விற்பனை செய்ய முற்பட்டு நிற்கின்றது. ஆகையினால், இவ் இயற்கை வளங்களும் விரைவில் சுரண்டலுக்கு உள்ளாகக்கூடும்.

எவ்வாறு திறந்த பொருளாதாரக் கொள்கை கலாசாரச் சீர்கேட்டையும், பாதாள உலகக் கோஷ்டிகளையும் கொண்டு வந்து நாட்டைச் சீரழிவிற்குள் இட்டுச் செல்கின்றதோ அது போன்று இயற்கை வளச் சுரண்டலும் நாட்டின் இயற்கைச் சூழலைச் சிதைத்து, சின்னாபின்னமாக்கிவிடும். இது நாட்டையே வரண்ட பூமியாக்கிவிடும். இதனால், நாட்டின் எதிர்காலம் என்பதே கேள்விக்குள்ளாகிவிடும்.

# தற்போது நிலவும் சமாதானச் சூழலில் சிலர் அரசியல் லாபம் தேட முனைகின்றனர்

## -அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ

(கொழும்பு)

இன்று நாட்டில் சமாதானச் சூழல் நிலவி வருகின்றது. இதையும் சிலர் அரசியல் நடவடிக்கைக்காக பயன்படுத்த முனைகின்றனர். அண்மையில் நாட்டுப்பற்று உண்டு எனக் கூறும் சிஹல உறுமயக்காரர்கள் குரங்குபாஞ்சான் முகாமுக்கு அண்மையில் சென்றனர். அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய சமாதானச் சூழலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுமே ஏற்படுத்திக் கொண்டுள்ளமை காரணமாகவே அவர்களால் அங்கு செல்ல முடிந்தது என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவோம்'' திட்டத்தின் கீழ் முதலாவதாக அமைக்கப்பட்ட இளைஞர் நிலையம் அண்மையில் குருநாகல் மாவட்டத்தின் கல்கமுக நகரில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்ந்து பேசுகையில்,

இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டைக் குட்டிச் சுவராக்கியவர்கள் சிறில.சு. கட்சியினராவர். இன்று தொழில் வாய்ப்பை அதிகம் எதிர்பார்ப்பவர்கள் பொதுசன ஐக்கிய முன்னணியினரே. மீண்டும் பொ.ஐ.மு.ஜே.வி.பி.யினர் இளைஞர்களைக் குழப்ப முயல்கின்றனர்.

எமது அரசாங்கத்தைக் கலைக்க முடியுமென சனாதிபதி கூறிவருகின்றார். ஆனால் அவரால் எம்மை அசைக்க முடியாது. அன்று சனாதிபதியிலிருந்து சமுர்த்தி அலுவலர்கள் வரை ஊழல் புரிந்தனர்.

பயங்கரவாதத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினரே. அரச அதிகாரம் இருக்கையிலேயே தனது சொந்த கட்சிச் செயலாளர் ஐ.தே.கட்சி வருவதை அறியாத சனாதிபதி எப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசை வீழ்த்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

# பொது நிர்வாக அமைச்சின் கீழுள்ள அரச வீடுகளை அரச உத்தியோகத்தர்களுக்கே வழங்கத் தீர்மானம்

பொதுநிர்வாக அமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ள அரசாங்க வீடுகளை அரச உத்தியோகத்தர்களுக்கே வழங்கும் வகையில் முறையான திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வீடுகளில் குடியேற்றல், வீடுகளை மீள ஒப்படைத்தல் போன்றவை உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலேயே அரசு இப்புதியதிட்டத்தை அமுல் படுத்தத் தீர்மானித்துள்ளது. குறிப்பாக வீடுகளில் வசிக்கும் அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அல்லது இடமாற்றம் பெற்றுச் செல்லும் போதோ அல்லது பதவி விலகிடும் போது தங்களின் விருப்பத்திற்கேற்ப வீட்டை இன்னுமொருவரிடம் ஒப்படைப்பதால் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இவ் வீடுகளில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களை சேகரிக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சித் தலைமையகத்திற்கு இருபது ஆயிரம் முறைப்பாடுகள்

பொதுமக்களிடமிருந்து கடந்த வருடம் சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் எதிர்க்கட்சி தலைமையகத்திற்கு கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இம் முறைப்பாடுகள் எழுத்து மூலமாகவும், வாய்மூலமாகவும் கிடைக்கப்பட்டதாகவும் இதில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்களால் கிடைக்கப்பட்ட இம் முறைப்பாடுகளே பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் சபைக்கும், ஆலோசனை தெரிவுக் குழுவிற்கும் சமர்ப்பித்துள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# குடாநாட்டில் சட்ட ஒழுங்கைப் பேணல்; அரச அதிபர் தலைமையில் நாளை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்ட ஒழுங்கைப் பேணுதல் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வது பற்றிய முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களும் பங்கு கொள்ளவுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்து வருவதால் அண்மைக் காலமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதால் அவற்றினை எவ்விதம் சீராக்குவது என்பது பற்றி இங்கு விசேடமாகக் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசு காட்டிவரும் ஓரவஞ்சனையால் நீர்வளம் விருத்தி செய்யப்படவில்லை

## யாழ்.அரச அதிபர் பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் மீது அரசாங்கம் காட்டிவரும் ஓரவஞ்சனை மனப்பான்மையால் யாழ். மாவட்டத்தில் நீர்வளம் மற்றும் அபிவிருத்திப்பணிகள் விருத்தி செய்யப்படவில்லையென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நீர்வள அபிவிருத்தி தொடர்பான ஆய்வரங்கில் தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ரவிராஜ், பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் துறைசார்ந்தோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் இன்னும் சில காலங்களில் நன்னீரிற்கு பெரும் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளபோது, யாழ். மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இன்னும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன நடைமுறைகளே நடைமுறையில் இருந்து வருகின்றது. புதிய நடைமுறைகள் எதுவும் அரசினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் எதிர்கால சந்ததியினர் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்க நேரிடும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (33)

# டெண்டுல்கரின் புதிய சாதனை!

பகல்-இரவு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக பட்ச ஓட்டங்களைக் குவித்தவர் என்ற பெருமையை இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

கடந்த ஞாயிறன்று குவாலியூரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடியபோது இச் சாதனையைப் பெற்றுள்ளார். இப்போட்டிக்கு முன்னர் 4 ஆயிரத்து 504 ஓட்டங்களைக் குவித்திருந்த டெண்டுல்கர் இப்போட்டியில் 60ஆவது ஓட்டத்தைப் பெற்ற போது 4 ஆயிரத்து 563 ஓட்டங்களைப் பெற்று பகல்-இரவு சர்வதேசப் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற சிறிலங்கா வீரர் சனத் ஜெயசூரியவின் சாதனையை முறியடித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களைப் பெற்றதுடன் தனது 35ஆவது சதத்தினையும் பெற்றுள்ளார்.



## சந்திரிகா...

கதைக்கவேண்டிய தேவை எமக்கிருக்கிறது. இந்த இடைக்கால நிர்வாகசபை வரைவைக் கையளித்தபின்பு அவர்களுடன் பல விடயங்கள் பேச வேண்டியுள்ளது. அவர்களது பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அரசியல் முன்னெடுப்புகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயவேண்டியிருப்பதால் அவர்களையும் நாம் வெகு விரைவில் சந்திக்க இருக்கின்றோம்.

o இந்த வரைவில் முஸ்லிம் தரப்புக்கு உரிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

தமிழர் தாயகப்பகுதியில் வாழ்கின்ற அனைத்துத் தரப்புக்கும் பிரதிநிதித்துவமும் அவர்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும் இருக்கும் என்றே நான் நம்புகிறேன்.

o கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக சர்ச்சைகளை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா ஏற்படுத்தியிருக்கிறார். இந்தக் கருத்தை விடுதலைப்புலிகளும் ஆதரிக்கிறார்கள் என்ற கருத்துக்களும் வெளியாகியுள்ளன இது தொடர்பாக?

இவ்விடயம் தொடர்பாக தற்போது நாங்கள் நோர்வேதரப்புடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறோம். இதனால் உடனடியாக இது தொடர்பாக கருத்துத் தெரிவிப்பது பொருத்தமற்றது என நான் நினைக்கிறேன். ஏனெனில் ஊடகங்களின் கருத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு இதற்கு கருத்துக் கூறுவது இந்த சமாதான சூழலைச் ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளிவிடும் என்பதனால் நான் இது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பவில்லை.

o வரைவு கையளிக்கப்பட்டவுடன் நேரடிப்பேச்சுக்கள் ஆரம்பமாகும் என நம்புகிறீர்களா?

நிச்சயமாக இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக இரண்டு தரப்பும் பேசி முடிவுகளைப் பெற வேண்டிய அவசியம் உண்டு. அந்த வகையில் அது சாத்தியப்படும் என்றே நம்புகிறேன்.

o பெரும்பாலும் எந்த மட்டில் ஆரம்பமாகும் என நம்புகிறீர்கள்?

இது எம் கையில் இல்லை அனுசரணையாளர்கள் என்றொரு தரப்பு உண்டு. இலங்கை அரசு என்றொரு தரப்புள்ளது. ஆகவே அவர்களது நிலைப்பாடுகளுக்கும் கருத்துக்களுக்கும் அமையவே அதற்குரிய திகதிகள் தீர்மானிக்கப்படும். எம்மைப் பொறுத்தவரை நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம். (லோ)

## க.கா....

சமாக தமிழீழ விடுதலைப்புலிகளோடும் சிறிலங்கா அரசாங்கத்தோடும் கலந்தாலோசிகாமல், அத்தோடு இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதிலே சமாதானமுயற்சிகளில் பலவித முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் நோர்வே அரசாங்கத்தோடும் இது குறித்து தீர்க்கமாக கலந்தாலோசிக்காமல் சனாதிபதி ஒருதலைப்பட்சமாக எடுத்த இந்த முடிவை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சனாதிபதியின் இந்த முடிவினால் மீண்டும் இந்த நாட்டிலே யுத்தம் ஏற்பட்டு இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட வேண்டுமா? என்பதை தான் நாங்கள் கேட்க வேண்டியுள்ளது. என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில், கடந்த இரு வருடங்களாக இலங்கையில் சமாதானம் நிலைபெற்று வருகின்றது என்று சொன்னால் அதற்கு முக்கியமாக இந்த யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களும் ஒரு காரணமாகும். ஆகவே அதன் தலைவரை எந்த வித விசாரணைகளும் இல்லாமல் ஒருதலைப்பட்சமாக அவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு சனாதிபதி கூறுவது மிகவும் பிழையானதொரு விடயமாகும்.

இதற்கு முன்பும் கூட ஏற்கனவே இந்த இனப் பிரச்சினை தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்த எரிக்சூல்ஹெய்ம் என்பவரையும் சனாதிபதி தொடர்ந்து இவர் சமாதான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. என்றதொரு கடிதத்தை முன்னர் நோர்வே பிரதமருக்கு அனுப்பியிருந்தார். ஆகவே சனாதிபதியை பொறுத்தவரை இப்படியான செயற்பாடுகளை அவர் தொடர்ந்து செய்து வருகின்றார். இது பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்து வதற்கு பல்வேறுபட்ட இடையூறுகளை ஏற்படுத்தும்.

இவர்களைத் திருப்பியனுப்பும் பட்சத்தில் நிச்சயமாக இன்னுமொரு யுத்தம் ஏற்பட முடியாது என்பதல்ல என்று குறிப்பிட்டார்.

# கிளி. மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவ கருத்தமர்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பினால் கிளிநொச்சி மாவட்ட உயர்தரப் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான வதிவிட தலைமைத்துவ கருத்தமர்வின் முதல் நாள் நிகழ்வு வைத்தார். தேசியக் கொடியை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றி வைத்தார். தொடர்ந்து உரைகளை கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், கிளி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.




நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கிளி வலயக்கல்விப் பணிமனையில் கிளி. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி தலைமையில் ஆரம்பமானது.

இதில் பொதுச்சுடரை கிளிவலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் ஏற்றி அரியரத்தினம், தமிழீழ மாணவர் அமைப்பு துணைப்பொறுப்பாளர் ஈழப்பிரியன், கிளி.வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் சண்முகராசா ஆகியோர் நிகழ்த்தினர். இந் நிகழ்வில் பெருந்தொகையான மாணவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

## புலிகளும்...

திரமே உரிமை உண்டு நாங்கள் ஒருசிறுபான்மை இனம். எமது கட்சிக்கு அவர்கள் அங்கீகாரம் அளிக்கிறார்கள் நாம் மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். அதனால் எமது ஆதரவும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அது நியாயமானது எனவும் தெரிவித்தார்.

தற்போது விடுதலைப்புலிகள் கையளிக்கப் போகும் திட்ட வரைவை அரசு ஏற்க மறுத்தால் அதற்கு நீங்கள் அழுத்தங்கள் எதையாவது பிரயோகிப்பீர்களா என பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது விடுதலைப்புலிகள் தமது திட்டத்தை இன்னும் கையளிக்கவில்லை அவர்கள் அரசிடம் கையளித்து அது தொடர்பான முடிவுகள் கிடைத்த தன்பின்னர்தான் நாம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தீர்மானிக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 11 மணி முதல் 12.30 வரை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி பிரதி யமைச்சர் முத்துசிவலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)

## யாழ்...

கனேடிய குழுவினர் யாழ். குடாநாட்டில் கரையோரப் பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டுள்ளனர். அத்துடன் பல தரப்பட்ட தரப்பினரையும் இக்குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (33)

## ரெலவ்சன்...

நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்பனவற்றுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இவரது அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரசாங்கம் இந்த விடயத்தில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மீனவர்கள்..

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்களின் வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்றுவருகிறன. (33,27)

## உள்துறை...

இடம்பெற்றது.

உள்துறை அமைச்சருடன் பதில் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. எம்.ம.ஹ்ரூப், உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைட் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முன்னதாக கிண்ணியாவிற்கு விஜயம் செய்த இவர்கள் அங்கு சேதமடைந்துள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைப் பார்வையிட்டனர். (25)

## சனாதிபதிக்கு...

இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது. சனாதிபதியும் மற்றும் 18 பேரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கிரிசாந்த வெலியமுன அரசியல் யாப்புக்கான 17ஆவது திருத்தச்சட்ட பிரகாரம் அரசியல் யாப்பு மன்றம் சிபார்சு செய்த தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமிக்கும் கடப்பாடு சனாதிபதிக்கு இருப்பதாகக் கூறினார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் சனாதிபதி நடக்காத பட்சத்தில் அவருக்கான சலுகையை இழக்க நேரிடும் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிப்பது அரசியல் யாப்பு தேவையாகும். சனாதிபதி அதனைச் செய்யாத பட்சத்திலே நீதிமன்றம் ஆதன் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மனுமீதான விசாரணை அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (32)

## புதிய...

இவருடன் சேர்ந்து சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அதிபர்களாக இருக்கும் நான்கு பேரின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டே புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படலாம் என அது தெரிவித்திருந்தது. இந்நிலையில், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இந் நால்வரதும் அனுபவங்களின் தொடர்பில் அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதனையடுத்து அரசியல் அமைப்புச் சபை எதிர்வரும் திங்களன்று கூடி புதிய பொலிஸ்மா அதிபரைத் தெரிவு செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


# 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 07 05 1941



மறைவு 01 10 2003

## வைரவநாதன் பரமேஸ்வரி
## (சின்னையா தேவி)

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு மேற்கு

29.10.2003 அன்று புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் 31.10.2003 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

த.முகவரி:-
சீராளன் குடியிருப்பு,
ஆலடிப்பைக்கடவை,
மன்னார். (3721)

தகவல்
குடும்பத்தினர்.



# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றிநவிலலும்

## முருகேசு மீனாட்சிப்பிள்ளை

118,D-10, உருத்திரபுரம்

எமது அன்புத் தெய்வம் திடீரென சுகயீனமடைந்ததும் அவரைக் காப்பாற்றுவதற்காக இறுதிவரை அரும்பாடுபட்ட வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார், உதவியாளர்கள் ஆகியோருக்கும் 1.10.2003 அதிகாலை அவர் இறைவனடி சேர்ந்ததும் எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் புரிந்து பூதவுடலை இங்கு கொண்டுவருவதற்கான சகல செயற்பாடுகளிலும் பெருதவி புரிந்தும், செய்தியறிந்ததும் எமதில்லம் திரண்டு எமக்கெல்லாம் ஆறுதல் அனுதாபங்கள் தெரிவித்தும், மலர்வளையங்கள் வைத்து மலரஞ்சலி செலுத்தியும், அஞ்சலிப்பிரசுரங்கள், செய்தித்தாள்கள், கடிதங்கள், தந்திகள், தொலை பேசிகள் மூலமாகவும் தமது அன்பையும் அனுதாபங்களைத் தெரிவித்தும், உணவு தேநீர் முதலியன வழங்கி ஆதரித்தும், இறுதி நிகழ்வுகளான அனைத்துப்பணிகளிலும் அஞ்சலி உரைகள் நிகழ்த்தியும் அன்று தொட்டு தொடர்ந்தும் எமக்கு அன்பும் ஆதரவும் காட்டி உதவிவரும் அனைத்து உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார், போராளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், அவர்களுடன் பணிபுரிவோர் உள்ளிட்ட அனைவருக்கும் அன்புள்ளங்கட்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அத்துடன் அன்னையின் அந்தியேட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 30.10.2003 காலை இரணைமடுவிலும் 31.10.2003 நண்பகல் எமதில்லத்திலும் நடைபெறும். இன் நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

Dr.மு.கோபாலபிள்ளை,
அரசினர் வைத்தியசாலை,
உருத்திரபுரம்.

ச.முருகேசு (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(3508)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.